Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar
Miscellaneous Case No. STC. 50/2022
Preliminary Register

Deposition of **DW- 3**

| Name | : | ஹானஸ்ட்ராஜ் | Father Name | : | சாமிநாதன் |
|---|---|---|---|---|---|
| Village | : | பூந்தோட்டம் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | ஓட்டுநர் |
| Religion | : | | Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05th day of March 2026.

<u>எதிரி தரப்பில் முதல் விசாரணை-</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். புகார்தாரர் மதனகோபாலை தெரியும். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 2019 ம் வருடம் 1 வது மாதம் புகார்தாரர் மதனகோபாலிடம் எதிரி சதீஷ்குமார் 3 லட்ச ரூபாய் பணம் வாங்கினார். ஆலங்குடி கடைத்தெருவில் வைத்து சின்னையன், ரமேஷ் மற்றும் என் முன்னிலையில்தான் மேற்படி பணத்தை புகார்தாரரிடமிருந்து எதிரி பெற்றுக்கொண்டார். மேற்படி பணம் பெறும்போது எதிரி, புகார்தாரரிடம் 4 காசோலைகள், ரூ.100 மதிப்புக்கான பத்திரம் மற்றும் கடனுறுதி சீட்டினை கொடுத்தார். அதில் சின்னையன் மற்றும் ரமேஷ் சாட்சிகளாக கையொப்பம் செய்தனர். மேற்படி கடன் தொகையான 3 லட்ச ரூபாய்க்கு மாதம் 5 காசு வட்டி

கொடுக்கவேண்டும் என்று சம்மதித்ததன் பேரில் மாதமாதம் 3 லட்ச ரூபாய்க்கு ரூ. 15,000/- வட்டி வீதம் செலுத்தி வந்தார். அதன்பின்பு மேற்படி தொகையான 3 லட்ச ரூபாயை பெற்றுக்கொண்டதிலிருந்து 2 மாதத்திற்கு பின்பு மீண்டும் புகார்தாரரிடம் எதிரி ரூ.65,000/- கடனாக பெற்றார். மேற்படி தொகையான ரூ.65,000/-க்கும் 5 பைசா வட்டி என சம்மதித்து ரூ.3250/- வட்டி பெற்று வந்தார். அதன்பின்பு மாதமாதம் ரூ.18,250/- வீதம் 10 மாதம் வட்டி செலுத்திவந்தார். மேற்படி வட்டித்தொகையை புகார்தாரரிடம் கொடுக்கும்போது சின்னையன் மற்றும் ரமேஷ் ஆகியோருடன் ஒன்றாக செல்வேன். அதன்பின்பு 6 மாதமாக வட்டி கொடுக்காததால் மேற்படி வட்டித்தொகைக்கும் அசலுக்கும் சேர்த்து ரூ. 2,25,000/- மொத்தமாக ஆஜர் எதிரி புகார்தாரரிடம் கொடுத்தார். அதன்பின்பு மாதாமாதம் ஆஜர் எதிரி புகார்தாரரிடம் வட்டி செலுத்தி வந்தார். பின்பு சின்னையன் இறந்துவிட்டதால் புகார்தாரருக்கும் ஆஜர் எதிரிக்கும் பிரச்சனை ஏற்பட்டு காசோலை மோசடி வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக நான் கேள்விப்பட்டேன்.

புகார்தாரர் தரப்பில் **குறுக்கு விசாரணை** -

என்மீது ஹரித்துவாரமங்கலம் காவல் நிலையத்தில் குற்ற வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரி சதீஷ்குமார் எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் எனது ஊர்க்காரர். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள ரமேஷ் என்பவரும் எனது ஊர்க்காரர்தான் என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது நான் வெளியூரில் இருந்ததால் வாங்கவில்லை அதனால் திருப்பப்பட்டது. எனக்கு வழக்கு எண்ணும் இந்நீதிமன்றத்தின் பெயரும் தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கு இன்று வாய்தா போடப்பட்டுள்ளது என்றும் வழக்கிற்கான விபரங்கள் கூறி இன்று சாட்சியம் அளிக்க வேண்டும் என்று யார் கூறினார் என்றால் ஆஜர் எதிரி சதீஷ்குமார் கூறினார். எனக்கு இவ்வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றாலும் என் முன்னிலையில் எதுவும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி சதீஷ்குமார் எனது ஊர்க்காரர் என்பதால் அவர் சொல்லிக்கொடுத்து என்னிடம் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் வழக்கு குறித்து தெரியாத விஷயங்களை

தெரிந்ததாகவும் எனக்கு முன்னிலையில் நடந்ததாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.05 12:45:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.